★ வடக்கு - கிழக்கு தமிழருக்கே சொந்தம்

விலை ரூபா 5-00

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 35 திருவள்ளுவர் ஆண்டு 2024 மார்கழி 24 இதழ் 326
யாழ்ப்பாணம் சனிக்கிழமை 8-1-1994

## சிங்கள பிரமுகர் பேட்டி

(யாழ்ப்பாணம்)

இலங்கையின் வடக்கு கிழக்குப்பகுதி தமிழர்களுக்கே சொந்தமான நாடு அது இங்குள்ள மக்களுக்கே முஸ்லிம் மக்களுக்கோ சொந்தமானது அல்ல என ஜனதா மித்திர என்ற அமைப்பினைச் சேர்ந்த சந்திரா ரணசிங்க தெரிவித்துள்ளார்.

'ராவய' என்ற பத்திரிகைக்கு வழங்கிய பேட்டியொன்றிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். வடக்கு கிழக்கு பகுதி தமிழர்களுக்கே சொந்தமான பகுதி ஆதலால் அங்கே போராடுபவர்களுக்கு அவர்கள் கேட்பதனை கொடுத்துவிடவேண்டும் அப்பொழுதுதான் அனைத்துப் பிரச்சனைகளும் சரியாகும். ஆனால் எமது பழைய தலைவர்கள் வடக்கு கிழக்கு பிரச்

(4ம் பக்கம் பார்க்க)

## புனர்வாழ்வு திட்டங்களில் வடக்கு-கிழக்கு புறக்கணிப்பு

(திருமலை)

வடக்கு—கிழக்குப் பகுதிகளில் புனர்வாழ்வு திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கென சிறிலங்கா அரசுக்கு வெளிநாடுகளும், சர்வதேச நிறுவனங்களும் வழங்கிய நிதி திருமலையில் மட்டுமே முழுமையாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் உள்ள சகல மாவட்டங்களுக்கும் இந்த

(4ம் பக்கம் பார்க்க)

# சூரியகந்தயில் அம்பலமான ரகசிய புதைகுழிகள் விவகாரம்

# அரசால் மூடிமறைக்க முயற்சி!

## சி.ஐ.டி.பொலிஸாரும்சட்டத்தரணிகளும் இழுபறி!!

(கொழும்பு)

இரத்தினபுரி மாவட்டத்திலுள்ள சூரியகந்த என்னும் காட்டுப் பிரதேசத்தில் கண்டுபிடிக்கப்பட்ட இரகசிய புதைகுழிகள், மனித எலும்புக்கூடுகள் பற்றிய விபரங்களை அரசு மூடி மறைக்க கடும் முயற்சிகளை மேற்கொகொண்டு வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

இரகசியப் பொலிசாருக்கும் சட்டத்தரணிகளுக்குமிடையில் இந்த விடயம் தொடர்பாக நேற்று எம்பிலிபிட்டிய மஜிஸ்திரேட் நீதிமன்றத்தில் சட்டத்தரணி கடும் இழுபறியும் ஏற்பட்டது.

மாத்தறை மாவட்ட எம். பி. மங்களசமரவீர, எஸ். ஏ. பிரேமரட்ண, சட்டத்தரணி பவித்திரா வன்னியாராச்சி ஆகியோர் இந்த இரகசிய புதைகுழிகள் தொடர்பாகவும்

(4ம் பக்கம் பார்க்க)

## எலும்புக் கூடுகளை பார்த்த பத்திரிகையாளர்மீது விசாரணை

(கொழும்பு)

இரத்தினபுரி சூரியகந்த பகுதியில் கண்டுபிடிக்கப்பட்ட இரகசிய புதைகுழிகள் மனித எலும்புக் கூடுகள் ஆகியவற்றை பார்வையிட்ட பத்திரிகையாளர்களை இரகசியப் பொலிசார் விசாரணைசெய்ய ஆரம்பித்துள்ளனர்.

இரகசியப் பொலிஸார் அடங்கிய குழு ஒன்று தனது விசாரணையை ஆரம்பிப்பதற்காக முதலில் 'திவயின' என்ற சிங்களப் பத்திரிகையின் அலுவலகத்துக்குச் சென்றது.

இந்தப் பத்திரிகையின் ஆசிரியரையும் மற்றும் இரண்டு பத்திரிகையாளர்களையும் இரகசியப் பொலிஸார் விசாரணை செய்துள்ளனர்.

விசாரணைகளைப் பதிவு செய்து கொண்ட பொலிசார் அரசாங்கத்துக்கு அபகீர்த்தி ஏற்படவா இதனைப் பத்திரிகையில் பிரசுரித்தீர்கள்? என

4ம் பக்கம் பார்க்க)

## மஜிஸ்திரேட் விசாரணை இன்று ஆரம்பம்!

(கொழும்பு)

சூரியகந்த பகுதியில் கண்டு பிடிக்கப்பட்ட மனிதபுதைகுழிகள் சம்பந்தமான மஜிஸ்திரேட் விசாரணை இன்று சனிக்கிழமை காலை அந்த இடத்தில் வைத்து எம்பிலிப்பிட்டிய மஜிஸ்திரேட் பி. ரணசிங்க தலைமையில் மேற்கொள்ளப்படும்.

எம்பிலிப்பிட்டிய பகுதியிலிருந்து காணாமல் போனவர்களின் பெற்றோர்கள் மற்றும் அவர்கள் உறவினர்கள் ஆகியோர் இந்த விசாரணையில்

(4ம் பக்கம் பார்க்க)

## கோபாலசாமிக்கு ஆதரவு அதிகரிப்பு

(சென்னை)

தி. மு. க விலிருந்து நீக்கப்பட்ட திரு. வை. கோபாலசாமிக்கு தற்போது ஆதரவு பெருகி வருவதாக தமிழக செய்திகள் தெரிவிக்கின்றன.

இது சம்பந்தமாக சென்னை கிறிஸ்தவக் கல்லூரியின் அண்மையில் நடத்தப்பட்ட கருத்துக் கணிப்பில் தி. மு. க. தலைவர் பதவிக்கு 42 வீதம் பேர் திரு கோபாலசாமியை ஆதரிப்பதாகவும் 37 வீதம் பேர் திரு.மு.கருணாநிதியின் அடுத்த வாரிசாக திரு. கோபாலசாமியை ஏற்பதாகவும் தெரிவித்துள்ளனர்.

மேலும் தி. மு. க. வை முழுமையாக ஆதரிப்போரில் 47 வீதம் பேர் கோபாலசாமியைக் கட்சியிலிருந்து நீக்கியது தவறு என்றும் தெரிவித்துள்ளனர். 35 வீதமானோர் கோபாலசாமியை நீக்கியது சரி என தெரிவித்துள்ளனர்.

திரு. கருணாநிதியின் அடுத்த வாரிசாக கோபாலசாமி வர வேண்டும் என்பதனை 34 வீதமானோர் ஆதரித்துள்ளனர். 24 வீதம் பேர் பேராசிரியர் க. அன்பழகன் வரவேண்டுமென கணிப்பு வெளியிட்டுள்ளனர்.

-ஏ-பி

## கிளாலி - பூநகரி படகுச் சேவை

(யாழ்ப்பாணம்)

கிளாலி - பூநகரி படகுச் சேவை இன்று சனிக்கிழமையும் நாளை ஞாயிற்றுக்கிழமையும் வழமையான நேரத்திற்கு இடம்பெறும் என விடுதலைப் புலிகளின் அரசியல் பிரிவு தெரிவித்துள்ளது. -க-பி

## பலாலி காவலரண்கள் மீது புலிகள் மோட்டார் தாக்குதல்!

(யாழ்ப்பாணம்)

பலாலி இராணுவமுகாம் காவலரண்களை நோக்கி விடுதலைப் புலிகள் நேற்று முன்தினம் கடும் மோட்டார் குண்டுத் தாக்குதலை நடத்தியுள்ளதாக பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

புலிகளின் இத்தாக்குதலை அடுத்து இரு தரப்பிலும் சரமாரியான துப்பாக்கி பிரயோகங்கள் பலமணி நேரம் இடம்பெற்றுள்ளதாகவும் அறியப்படுகிறது.

இத்தாக்குதலினால் படையினர் தரப்பில் பலத்த சேதம் ஏற்பட்டிருக்கலாமெனக் கருதப்படுகிறது

(4-ம் பக்கம் பார்க்க)

## வலிகாமம், வடமராட்சியில் கடும் ஹெலி தாக்குதல்!

(யாழ்ப்பாணம்)

ஹெலிகொப்டர்களிலிருந்து நேற்றுக் காலை முதல் நண்பகல்வரை வலிகாமம் வடக்கு வலிகாமம் கிழக்கு மற்றும் வடமராட்சி பகுதிகளில் பலத்த 60 ஹெலிபர் தாக்குதல்கள் நடத்தப்பட்டன.

அச்சுவேலி மகாவித்தியா

## இரு மாணவர்கள் காயம்

லயம் மீது நேற்று நண்பகல் 11 மணியளவில் ஹெலிகொப்டர் ஒன்று மேற்கொண்ட கடுமையான ஷெல் தாக்குதலில் இருமாணவர்கள் படுகாயமடைந்தனர்.

அச்சுவேலி, ஆவரங்கால் பகுதியில் பரவலாக கடுமையான ஷெல் தாக்குதலை நடாத்திய ஹெலி ஒன்று அச்சுவேலி மகாவித்தியாலயம்மீதும்

(4-ம் பக்கம் பார்க்க)

## அமைச்சரவையில் மேலும் சில மாற்றங்கள்

(கொழும்பு)

சிறிலங்கா அமைச்சரவையில் நேற்று முன்தினம் சில மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளது.

இந்த மாற்றத்தின்படி வீடமைப்பு நிர்மாணத்துறை அமைச்சராக இருந்த சிறிசேன கூரே புதிய வீடமைப்பு நகர அபிவிருத்தி அமைச்சராக நியமிக்கப்பட்டுள்ளார்.

சிறிலங்கா அமைச்சரவையில் மேலும் சில மாற்றங்கள் செய்யப்படலாம் என்று எதிர்பார்க்கிறோம். —பி

## வரி விளம்பரம்

**MATHS**

புலமைப் பரீட்சை வகுப்பிலிருந்து (O/L) வரை எட்டாய பாடமாகிய கணித பாடத்தினை ஆரம்ப அறிவிலிருந்து விஷேட சித்திக்கு 40 மணித்தியாலங்களில் கற்பிக்கப்படும். ஆறுமுகநாதன், 10, சுச்சேரி கிழக்கு ஒழுங்கை, யோகேந்திரா வீதி, சுண்டிக்குளி. (கி- 699)

**இலவசம்**

பணவசதியற்ற 24 சைவ பாலர்களுக்கு தைப்பூச தினத்தன்று காலை 10 மணிக்கு, 179, பிறவுண் வீதியில் இலவச பாலர் பாடசாலை ஆரம்பமாகவுள்ளது. சேரவிரும்புவோர் முகவரியிட்ட முத்திரை அஞ்சல் உறையுடன் 15ம் திகதிக்கு முன் விண்ணப்பிக்கவும். பாலர் கல்விக் கழகம், 49/5, யாழ். றோட், யாழ்ப்பாணம். (கி-705)

**வாடிக்கையாளர்களின் கவனத்திற்கு**

நியூ விக்ரேஸ் வாடிக்கையாளர்கள் கவனத்திற்கு 31-12-93 க்கு முன் எம்மிடம் திருத்துவதற்கு ஒப்படைத்த பொருள்களை 31-1-94 க்கு முன் பெற்றுக்கொள்ளவும். 31-1-94 க்குப் பின் அவற்றை மீளப்பெறமுடியாது என்பதை அன்புடனும், வேதனையுடனும் தெரிவித்துக்கொள்கிறோம் நன்றி. நியூ விக்ரேஸ் பி எம் கி. ஒழுங்கை, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். (கி-700)

**தேவை**

பாலர் வகுப்பிலிருந்து A/L) வரை தங்களால் இயன்ற பாடங்களைக் கற்பிக்கக்கூடிய ஆசிரியர்கள் தேவை. காலை 9-00—10-00 மாலை 2-00—3-00 வரை நேரடியாகச் சந்திக்கவும். ஆறுமுகநாதன், 10, கச்சேரி கிழக்கு ஒழுங்கை, யோகேந்திரா வீதி, சுண்டிக்குளி. (கி- 698)

தமிழ், ஆங்கிலம், இலக்கியம், இலக்கணம், சரித்திரம், அரசியல் ஆகியவற்றில் திறமையுள்ள இளைப்பாறிய ஆசிரியர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. புத்தகங்கள் எழுதி அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். சுய விபரங்களுடன் 14-1-94க்கு முன்னர் விண்ணப்பங்களை அனுப்பிவைக்கவும். விளம்பர இலக்கம்: எ - 3741, C/o ஈழநாடு, யாழ்ப்பாணம். (எ-3741)

## இன்றைய உதைபந்தாட்டம்

(யாழ்ப்பாணம்)

பாஷையூர் புனித அந்தோனியார் ச. ச. மு. நிலைய ஆதரவில் நடைபெறும் உள்ளூர் உதைபந்தாட்ட நொக்கவுட் போட்டியில் இன்றைய கண்காட்சி ஆட்டத்தில் சென். அன்ரனிஸ் கழகத்தை எதிர்த்து நாவாந்துறை சென். நீக்கிலஸ் கழகம் மோதும்.

இப்போட்டி பாஷையூர் சென். அன்ரனிஸ் கழக மைதானத்தில் நடைபெறவுள்ளது. -வி-

## அறிவுக் களஞ்சியம் வெளிவந்துள்ளது

(யாழ்ப்பாணம்)

"அறிவுக் களஞ்சியம்" 19வது இதழ்வெளிவந்துள்ளது. இந்த இதழில், ஆமையும், முயலும் -இறபி, முதன்முதலாக- புத்தெரளி, நீர்-சுத்தம், டிவகலாலா, டைனோசார் எனும் இராட்சத விலங்குகள்-சர்வசித்தன் மற்றும் பலர் எழுதிய அறிவியல் கட்டுரைகள், அறிவியல் சிறுதுணுக்குகளுடனும் வெளிவந்துள்ளது. வழமையான வினாவும், விடையும், புதினம், திருக்குறள் முத்துக்கள் போன்ற அம்சங்களும் இடம் பெற்றுள்ளன. -ம

## திருடன் தப்பியோட்டம்

(யாழ்ப்பாணம்)

வீட்டினுள் புகுந்த திருடன் முன்றைய இனந்தெரியாத திருடன் ஒருவன் வீட்டினுள்படுத்திருந்தவரை எழுப்பி அவரது கழுத்திற்கு நேராகக் கத்தியைப் பிடித்து பணம், பெறுமதியான பொருள்கள் இருக்குமிடத்தைக் கூறும்படிகேட்ட போது உஷாரடைந்த வீட்டுக்காரன் திடீரென கத்தியைப் பிடித்தவாறு கூக்குரல் இட்டதைபடுத்து அயல் வீட்டுக்காரர் ஓடி வருவதைக் கண்டு திருடன் கத்தியை இழுத்துக்கொண்டு ஓடிமறைந்தான்.

திருடன் சென்றதையடுத்து வீட்டு முற்றத்தில் இருந்து ஒரு போத்தலில் மண்ணெண்ணெய் கண்டெடுக்கப்பட்டது-

இச்சம்பவம் நவாலி வடக்கில் நேற்று முன்தினமிரவு 12 மணிக்கு இடம்பெற்றது. -ரி

## குடிசைகள் வழங்க ஏற்பாடு

(உடுவில்)

இராணுவ நடவடிக்கைகளினால் இடம் பெயர்ந்துள்ள குடும்பங்களை குடியமர்த்துவதற்கென நவாலியில் உள்ள அட்டகிரி கிராமத்தில் குடிசைகள் அமைக்கும் பணிகள் தற்போது மேற்கொள்ளப்பட்டுள்ளன.

அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம் ஜெர்மன் ஜனநாயகக் குடியரசு உதவித் திட்டத்தின் கீழ் இவ்வாறான இருபத்தெட்டு குடிசைகளை இப்பகுதியில் அமைத்து வருகின்றது. -109

## தமிழீழ பொது கல்வி தேர்வு முடிவுகள்

(யாழ்ப்பாணம்)

1993ல் நடைபெற்ற தமிழீழ பொதுக்கல்வித் தேர்வில் கூடுதல் புள்ளிகளைப் பெற்று, கோட்ட மட்டத்தில் இரண்டு இடங்களையும் பெற்ற மாணவர்களின் விபரம்:-

**நல்லூர்**

உலகபிரகாசம் ஜெயதீபன் யாழ் இந்துக்கல்லூரி 8 டி657, மகாலிங்கம்அறிவழகன் யாழ் இந்துக் கல்லூரி 7 டி 1 சி 653.

**யாழ்ப்பாணம்**

பாமினி தர்மலிங்கம் சுண்டிக்குளி மகளிர் கல்லூரி 8 டி 663, ஜொஷனி திருவிளங்கம் சுண்டிக்குளி மகளிர் கல்லூரி 7 டி 1சி 657.

**ஊர்காவற்றுறை**

பெலிசியா பெலிக்ஸ் அப்பேல் ஊர். புனித மரியாள் மகளிர் வி 6 டி 2 சி 628, புவனச்சந்திரன் ரவீந்திரன் யாழ் ரன் கல்லூரி 5டி, 1சி, 2எஸ் 545.

**வேலணை**

பரமானந்தன் சாயிநேசன் புங்குடுதீவு ம. வி. 4டி, 2சி, 2எஸ் 540, பரஞ்சோதி ஜெனதீபன் சேர்வை து. ம. வி. 3டி 4சி 1எஸ் 526.

**கரவெட்டி**

சர்மிலா குலேஸ்வரன் உடுப்பிட்டி மகளிர் கல்லூரி 6டி, 2சி 650, சிராந்தினி ஜெகநாதன் உடுப்பிட்டி மகளிர் கல்லூரி 8டி 646.

**பருத்தித்துறை**

கந்தசாமி யோகநாதன் ஹாட்லிக் கல்லூரி 8டி 657. சிவம் ராஜாராம் ஹாட்லிக் கல்லூரி 7டி 1சி 649

**மருதங்கேணி**

சிவமலர் வேலுப்பிள்ளை ஆழியவளை இ. கி. த. க பா. 4டி 2சி 2எஸ், 517, துரைசிங்கம் விஜயாளினி ஆழியவளை இ. கி. த. க பா. 3டி 3சி 2எப் 473.

**சாவகச்சேரி**

சாமுவேல் துஷ்யந்தன் சாவகச்சேரி இந்துக்கல்லூரி7 டி1சி 662, சுபாஜினி ராசதுரை சாவகச்சேரி இ. கல்லூரி 7டி 1சி 643.

**உடுவில்**

ரஜித்தா சாந்தரட்ணம் உடுவில் மகளிர் கல்லூரி 7டி 1சி654, சுதரஜினி புலேந்திரன் உடுவில் மகளிர் கல்லூரி 6டி 2 சி 632.

**சங்கானை**

நிலானி இராமச்சந்திரன் யாழ்ப்பாணக் கல்லூரி 7டி 1சி 642, செல்வராஜா தவேந்திரன் யாழ்ப்பாணக் கல்லூரி 5டி 4சி 638.

**சண்டிலிப்பாய்**

சரோளலிங்கம் சசிகரன் மானிப்பாய் இ. க. 6டி 1சி 1 எப் 582. ஜராங்கினி யோகராஜா மானிப்பாய் மகளிர் கல்லூரி3 டி 5 சி 568.

**கோப்பாய்**

ஜெயமாலா தர்மலிங்கம் நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரி 54 டி 3சி 601. சிவபாக்கியநாதன் ஸ்ரீசோதி கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி 6 டி 1 சி 1 எப் 591.

**தெல்லிப்பழை**

திருச்செல்வி திருநாவலூரன் யூனியன் கல்லூரி 6டி 2சி 645. சர்மிளா சண்முகலிங்கம் யூனியன் கல்லூரி 5டி 3சி 620. ம-ரி


## கண்ணீர் அஞ்சலி

சிவநெறிச் செம்மல்

**அமரர் ச. நமசிவாயம்**

அம்பிகா மருந்துச்சாலை உரிமையாளரும், (சாவகச்சேரி) சரசாலை இந்துமன்ற காப்பாளருமான

சிவநெறிச் செம்மல்

அமரர் ச. நமசிவாயம் அவர்களின்

மறைவிற்கு எமது கண்ணீர் அஞ்சலியைச் செலுத்துகின்றோம்.

**பரணி மருந்துச்சாலை**

ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

(ஏ-37-8)



## முதலாண்டு நினைவலைகள்

**உதயச்சந்திரன் குஜெந்தா**



தோற்றம்:

**01-03 1984**

மறைவு:

**04-01-1993**

திதி: 08 - 01 - 1994

உனது இருப்பு தந்த
சுகமிழந்து
தனியாய் தவிக்கிறோம்
உன் பிரிவை
ஆற்றப்படுத்த முடியாது
துடிக்கிறோம்.

ஆத்மா சாந்தியடைவதாக.

பெற்றோர், சகோதரர்கள்,
உற்றார், உறவினர்கள்.

5, வீட்டுத்திட்ட வீதி,
நாவற்குழி,
கைதடி.

(கி-703)



## வேலை வாய்ப்பு

**Trainees Production Assistant**

(பயிலுநர் உற்பத்தி உதவியாளர்)

மேற்படி வெற்றிடத்துக்கு பின்வரும் தகுதியுடைய விண்ணப்பதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும். உங்கள் விண்ணப்பங்களை 17-01-1994 இற்கு முன்னர் அனுப்பி வைக்கவும்.

தகுதி

வயது: ஆகக் கூடியது 30 - பெண்.

கல்வித்தகைமை:- ஆகக் குறைந்தது க. பொ. த. (உ/த) சித்தி.

(தாவரவியல் அல்லது இரசாயனவியல் ஆகிய பாடங்கள் அடங்க வேண்டும்.)

வேதனம்:- அனுபவம் தகுதிகளுக்கு ஏற்ப வழங்கப்படும்.

விண்ணப்பிக்க வேண்டிய முகவரி:

நிர்வாக முகாமையாளர்,

Taste Line Industries [Pvt] Ltd.

14, Seenier Lane,
Jaffna.

(எ-3742)



## 9வது வெற்றுப் போத்தல் பரிசு குலுக்கல் போட்டியில் பரிசு பெற்றோர் இலக்கங்கள் வருமாறு

| | | | |
|---|---|---|---|
| 1609 | 1687 | 3669 | 4512 |
| 1611 | 2595 | 3907 | 4516 |
| 1618 | 2697 | 3951 | 4518 |
| 1669 | 3186 | 4111 | 4523 |
| 1675 | 3193 | 4312 | 4537 |
| 1676 | 3213 | 4315 | 4554 |
| 1677 | 3222 | 4316 | 4556 |
| 1679 | 3470 | 4324 | 4558 |
| 1682 | 3495 | 4335 | 4873 |
| 1684 | 3666 | 4406 | 5070 |

10வது போட்டியில் இன்றே பங்கு பற்றுங்கள், பங்கு பற்றுவதற்கான நிபந்தனை ஜாம் சோடியக் அல்லது பியர் ஏதாவது 5 போத்தல்களை கொடுத்து அதற்கான பணத்துடன் ஒரு அதிர்ஷ்டலாபச் சீட்டையும் பெற்றுக் கொள்ளவும்.

**TASTE LINE INDUSTRIES (PVT) LTD**

14, SEENIER LANE, JAFFNA.

(ஏ-3749)

## பெருமழையினால்
# வவுனியாவில் 73 வீதமான மக்கள் பெரும் பாதிப்பு

(வவுனியா)

வவுனியாவில் அண்மையில் பெய்த மழையினால் ஏனைய உடைப்பெடுத்தமையால் மட்டும் 73 வீதமான மக்கள் பாதிக்கப்பட்டுள்ளதாக வவுனியா கோட்ட அரசியல் துறையினர் நடத்திய மதிப்பீடு ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

1500 ஏக்கர் நெல் வயல்கள் முற்றாக அழிந்துள்ளன. அத்துடன் மேட்டு நிலப்பயிர்களில் 65 வீதமானவை அழிந்துள்ளன. 35 வீதமான உழுந்து, சௌபி போன்ற பயிர்வகைகளும் அழிந்துள்ளன.

இதனிடையே மழை வெள்ளத்தினால் மிகவும் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு தமிழ் பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தினர் விதை நெல் மற்றும் கிடுகு போன்றவற்றை வழங்கி உதவிவருகின்றனர். -நி

# தமிழக அரசுக்கு எதிராக ஆர்ப்பாட்டம்

(சென்னை)

அரச செயலகங்கள் மற்றும் அரச நிறுவனங்களுக்குப் புதிதாக ஆட்களைச் சேர்ப்பதற்குத் தடை செய்யும் மசோதாவைத் தமிழக அரசு வாபஸ் பெறாவிட்டால் இம்மாதம் 10-ம் திகதி பெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடத்தப்படுமென எம். ஜி. ஆர். அண்ணா திராவிட முன்னேற்றக் கழகப் பொதுச் செயலர் எஸ். திருநாவுக்கரசு தெரிவித்துள்ளார்.

அரச நிறுவனங்கள் மற்றும் அரச செயலகங்கள் முன்னால் மேற்படி கண்டன ஆர்ப்பாட்டம் நடாத்தப்படும் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இதே வேளையில் வை. கோ பாலசாமி அணியைச் சேர்ந்த பொன். முத்துராமலிங்கமும் மேற்கண்ட இவ் எச்சரிக்கையை விடுத்துள்ளார். -க-நி

## பொதுக்கூட்டமொன்றில்
# உரையாற்ற முற்பட்ட 'ராவ்' தடுத்து நிறுத்தப்பட்டார்

(கொழும்பு)

இந்தியப் பிரதமர் பி. வி. நரசிம்மராவ் தமது சொந்த தேர்தல் தொகுதியான நந்தியாலில் பொதுக்கூட்டமொன்றில் உரையாற்ற முற்பட்ட பொழுது கம்யூனிஸ்ட் தொண்டர்களால் தடுத்து நிறுத்தப்பட்டதாக ராய்ட்டர் செய்தி வெளியிட்டுள்ளது.

நேற்று முன்தினம் இரவு இச் சம்பவம் இடம்பெற்றதாக அச்செய்தி மேலும் தெரிவிக்கிறது.

இதேவேளை 'கேட்' எனப்படும் உலக வர்த்தக உடன்படிக்கையில் இந்தியா கைச்சாத்திட்டதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் பிரதமர் நரசிம்மராவ் செல்லவேண்டிய வீதியின் ஓருக்கமாக அமர்ந்து மேற்படி தொண்டர்கள் மறியல் போராட்டம் நடத்தியதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன. (க-நி)

## மாகோ வருகிறது

(யாழ்ப்பாணம்)

நேற்றுக்காலை பருத்தித்துறை துறைமுகத்துக்கு வந்து சேருமென எதிர்பார்க்கப்பட்ட மாகோ கப்பல் தவிர்க்க முடியாத காரணத்தால் நேற்றுப் பிற்பகல் வரை வந்து சேரவில்லையென யாழ். மாவட்ட அரச அதிபர் தெரிவித்தார்.

இக்கப்பல் இன்று காலை பருத்தித்துறை துறைமுகத்துக்கு வந்து சேருமென எதிர்பார்க்கப்படுகிறது. இந்தக் கப்பலில் 80 பயணிகளும் பிரயாணம் செய்வதாக அவர் மேலும் தெரிவித்தார். -152


# கண்ணீர் அஞ்சலி

சிவநெறிச்செம்மல்
## அமரர் ச. நமசிவாயம்

அம்பிகா மருந்துச்சாலை உரிமையாளரும் (சாவகச்சேரி சரசாலை இந்து மன்ற காப்பாளருமான சிவநெறிச்செம்மல் அமரர் ச நமசிவாயம் அவர்களின் மறைவிற்கு எமது கண்ணீர் அஞ்சலியை செலுத்துகின்றோம்.

**எஸ். ரி. மெடிக்கல்ஸ்**

430, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

(ஏ-3747)



# கண்ணீர் அஞ்சலி

"சிவநெறிச்செம்மல்"
## உயர்திரு. ச. நமசிவாயம்

அவர்களின் மறைவு

சைவ உலகிற்கு காலத்தால் ஈடுசெய்ய முடியாத ஓர் பேரிழப்பாகும்.

தென்மராட்சி இந்து இளைஞர் ஒன்றியத்தின் ஆரம்பகாலத்தில் போசகராக இருந்த இவர், சைவ சமய அறிவியல் வளர்ச்சிக்கும், இளைஞர் உலகிற்கும் அளப்பரிய பணிகள் பலபுரிந்தவர். தமிழ், சைவ வளர்ச்சிக்கும் பணி செய்த ஒரு பெரியாரை இன்று நாம் இழந்துவிட்டோம்.

★ அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திப்போமாக.

தென்மராட்சி
**இந்து இளைஞர் ஒன்றியம்**
சாவகச்சேரி.

08 - 01 - 1994. (எ-3751)


### எலும்புக்கூடுகளை
(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ஒரு பத்திரிகையாளரைப் பார்த்து வினவியதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

'ஐலண்ட்' பத்திரிகை மூலம் சம்பந்தப் பகுதிக்குச் சென்ற பத்திரிகையாளர் அலுவலகத்துக்கு வருகை தராதிருந்த காரணத்தால் அவசர விசாரணை செய்வதற்கு தாம் எதிர்வரும் திங்கட்கிழமை அங்கு மீண்டும் வருவதாக கூறிச் சென்றுள்ளனர். (இ-நி)

### புனர்வாழ்வு
(1ம் பக்கத் தொடர்ச்சி)

நிதி வழங்கப்பட்டு புனர்வாழ்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவேண்டிய நிதியில் திருமலை மாவட்டத்தில் மட்டுமே இது செலவுபடுத்தப்பட்டுள்ளது. இதனால் ஏனைய பகுதிகளில் புனர்வாழ்வுத் திட்டங்கள் மேற்கொள்ளப்பட முடியாமலுள்ளது.

இந்த நிதியும் இங்களப் பகுதிகளுக்கு அரசால் அனுப்பப்படுகின்றது. உலக வங்கி ஆசிய அபிவிருத்தி வங்கி ஆகிய நிறுவனங்களுக்கும் அமெரிக்கா, இத்தாலி ஆகிய நாடுகளும் இதற்கான உதவியை வழங்கியிருந்தன. —நி

### வலிகாமம்
(1ம் பக்கத் தொடர்ச்சி)

சரமாரியாக ஷெல் தாக்குதலை நடாத்தியது.

பாடசாலை நடைபெற்றுக் கொண்டிருந்தபோது இத்தாக்குதல் இடம்பெற்றதால் காயமடைந்தவர்களில் ஒருவரான 10-ம் ஆண்டு மாணவியான மார்க்கண்டு றமீஸ்ராணி (16 வயது அச்சுவேலி வடக்கு) என்ற மாணவி யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இத்தாக்குதலின்போது பாடசாலை கூரை ஓடுகளும் பாடசாலைமண்டபமும் பலத்த சேதமடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை சுன்னாகம், ஏழாலைப் பகுதியில் நேற்றுக்காலை பரவலாக ஹெலி கொப்டர் தாக்குதல் நடாத்தியுள்ளது.

இப்பகுதியை வட்டமிட்ட ஹெலி காலை 8 மணியளவில் சுமார் 10 நிமிடம் கடுமையான ஷெல் தாக்குதலை மேற்கொண்டது எனினும் எவரும் காயமடையவில்லை.

இதையடுத்தே மீண்டும் அச்சுவேலிப் பகுதிக்கு வந்த ஹெலி தாக்குதலை நடாத்தியுள்ளது. கடந்த சில தினங்களாக குடாநாட்டின் பல பகுதியிலும் ஹெலித் தாக்குதல் பரவலாக இடம்பெற்று வருவதும் தெரிந்ததே. இதே நாளில் வடமராட்சி பகுதியிலும் ஹெலியிலிருந்து கடும் தாக்குதல் நடத்தப்பட்டது. -இ-நி

### வடக்கு-கிழக்கு
(1-ம் பக்கத் தொடர்ச்சி)

னையை தீர்ப்பதற்கு விருப்பமின்றியும் விட்டுக் கொடுத்தல் எதுவுமின்றி பிடிவாதமாக உள்ளனர் இதுவே வடக்கு கிழக்கு பிரச்சினை தீர்வின்றி தொடர்வதற்கு காரணமாகும் என அவர் மேலும் தெரிவித்தார்.

வடக்கு கிழக்குப் பிரச்சினை ஒருபோதும் யுத்தத்தின் மூலம் தீர்க்கமுடியாது. சமாதானப் பேச்சுக்களின் மூலமே தீர்த்துக்கொள்ள முடியும் இந்தப் பிரச்சினை முன்னர் அவர்களால் மூடப்பட்ட கட்டிடத்திற்குள்ளேயே இடம்பெற்றுவந்தன ஆனால் இப்போது அனைத்து மக்களுக்கும் இப்பிரச்சினையின் உண்மைநிலை பற்றி தெரியவந்துள்ளது.

ஆகவே சமாதானப் பேச்சுவார்த்தைகள் மூலமே இப்பிரச்சினையைத்தீர்க்க சகல தரப்பினரும் முன்வர வேண்டும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். -நி

### சூரியகந்த
(1ம் பக்கத் தொடர்ச்சி)

மனித எலும்புக் கூடுகள் தொடர்பாகவும் எம்பிலிப்பிட்டிய மஜிஸ்திரேட் நீதிமன்றத்தில் மனுக்களைத் தாக்கல் செய்திருந்தனர்.

இது சம்பந்தமான மரண விசாரணைகள் நேற்று வெள்ளிக்கிழமை மேற்படி மஜிஸ்திரேட் நீதிமன்றத்தில் ஆரம்பமாக இருந்தன எனினும் இரகசிய பொலிசார் நேற்று தமது சார்பில் இந்த மஜிஸ்திரேட் நீதிமன்றத்தில் மற்றுமொரு மனுவை தாக்கல் செய்தனர்.

இந்தச்சம்பவம் தொடர்பான விசாரணைகளை மேற்கொள்ளும் பொறுப்பு தம்மிடம் விடப்பட்டிருப்பதாகவும் இந்த மனுதொடர்பான விசாரணையை 10-ம் திகதி திங்கட்கிழமை மேற்கொள்ளுமாறும் தமது மனுவில் கேட்டிருந்தனர்.

எனினும் இதற்கு எதிரான மனுவொன்றை சட்டத்தரணி பிரேமரட்ன சமர்ப்பித்தார்.

சம்பந்தப்பட்ட விசாரணையை நேற்றைய தினமே மேற்கொள்ளும்படி அவர் தமது மனுவில் கேட்டிருந்தார்.

எம்பிலிப்பிட்டிய மஜிஸ்திரேட் இவரது இந்த மனுவை ஏற்றுக் கொண்டபின் விசாரணையை மீண்டும் நேற்று ஆரம்பித்தார்.

இந்த விசாரணையின் போது மஜிஸ்திரேட் வழங்கிய உத்தரவின் பேரில் இன்று காலை 8-30 மணிக்கு மனித புதைகுழிகள் தொடர்பான மஜிஸ்திரேட் விசாரணை சூரியகந்த மலை உச்சியில் ஆரம்பமாகும் என அறிவித்தார். -இ-நி

## கந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

வடமாகாண இணைக்கப்பட்ட பல்கலைக் கழக கல்லூரி மாணவர்களுக்கான கலந்துரையாடல் யாழ். வேம்படி மகளிர் கல்லூரியில் நாளை ஞாயிற்றுக்கிழமை 9ம் திகதி காலை 9-30 மணிக்கு நடைபெறவுள்ளது. மேற்படி நிறுவனத்தில் கல்வி பயிலும் மாணவர்கள் அனைவரையும் இந்நிகழ்வில் கலந்து கொள்ளுமாறு விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பு கேட்டுள்ளது.

இதேவேளை கிழக்கு பல்கலைக்கழக மாணவர்களுக்கான கலந்துரையாடல் ஒன்று எதிர்வரும் 10ம் திகதி திங்கட்கிழமை காலை 10 மணியளவில் புதிய விஞ்ஞான கல்விக் கழகத்தில் (எழிலகம் முன்பாக) நடைபெறவுள்ளது என்றும் மாணவர் அமைப்பு அறிவித்துள்ளது. -நி

## ஒய்வூதியம்

(மானிப்பாய்)

பர்மா, சிங்கப்பூர், மலேசியா ஆகிய நாடுகளிலிருந்து ஒய்வூதியம் பெறுபவர்களின் கடந்த ஆண்டின் டிசம்பர் மாதத்துக்குரிய ஒய்வூதியப் பற்றுச்சீட்டுக்களும் காசோலைகளும் உரியவர்களுக்கு யாழ் செயலக ஒய்வூதியப் பிரிவிலிருந்து அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. (71)

## மின்சார கட்டணம் 30வீதத்தால் அதிகரிப்பு

(கொழும்பு)

மின்சாரக் கட்டணம் அடுத்த மாதம் 1ம் திகதியிலிருந்து 30 சத வீதத்தினால் அதிகரிக்கப்படுமென இலங்கை மின்சாரசபை அறிவித்துள்ளது.

பெப்ரவரி முதல் பாவனையாளர்கள் மின்சாரக் கட்டணத்தை 30 நாட்களுக்குள் செலுத்தாவிடில் மின் விநியோகம் உடனடியாக துண்டிக்கப்படும்.

பாவனையாளர்கள் மீண்டும் மின்விநியோகத்தைப் பெறும் போது, நிலுவைத் தொகைக்கு பத்துசத வீதம் மேலதிகமாக அறவிடப்படுவதுடன் புதிய மின் இணைப்புக்காக ரூபா 355 கூடுதலாகவும் செலுத்த வேண்டும் என்று மின்சாரசபை மேலும் அறிவித்துள்ளது. -வீ-கே

### பலாலி
(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இதனையடுத்து நேற்றுமுன்தினம் படையினர் அச்சுவேலி, பத்மேனி பகுதியை நோக்கி கடும் ஷெல் தாக்குதல் மேற்கொண்டனர். க-நி

### மாஜிஸ்திரேட்
1-ம் பக்கத் தொடர்ச்சி

பங்குபற்றுவதற்காக நீதிமன்ற அனுமதியும் கிடைத்துள்ளது.

மனித உரிமைகள் குழுக்களின் பிரதிநிதிகள், சட்டத்துறை மாணவர்கள் ஆகியோரும் இந்த விசாரணையில் கலந்துகொள்ள அனுமதிக்கப்படுவர் என தெரிவிக்கப்பட்டது. (இ-நி)

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1994ம் ஆண்டு ஜனவரி மாதம் 8-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered a ua News paper at the General Post office, Sri Lanka under Licence Number B/10 336/B